பிரம்மரிஷி பத்ரிஜி ஆசிர்வாதத்துடன்..

# நாம் இகலோகவாசிகளா? அல்லது பரலோகவாசிகளா?



தட்டவர்த்தி வீரராகவராவ்

பிரம்மரிஷி பத்ரிஜி ஆசிர்வாதத்துடன்..

# நாம் இகலோகவாசிகளா? அல்லது பரலோகவாசிகளா?



**எழுதி வெளியிட்டவர்: தடவர்த்தி வீரராகவராவ்**

**மொழி பெயர்ப்பு : லலிதா தினகர்**

**திருத்தம் : கலைச்செல்வி**

**விலை : Rs. 30/-**

**புத்தகங்களைப் பெற**
**தட்டவர்த்தி வீரராகவராவு**
தட்டவர்த்திவாரி வீதி, பீமவராம் - 1
வெஸ்ட் கோதாவரி, ஆந்திரபிரதேஷ்
செல் : 9490171853, 9440309812
email : balajipyramid.bvm@gmail.com

## Tatavarthy Raghavarao Sir Books in English

| | | |
|---|---|---|
| 1. | Life Science (Part-I) | Rs.120 |
| 2. | Why is Guiding Not Meditation ? | Rs.100 |
| 3. | Which is the right meditation ? | Rs.100 |
| 4. | Die before death! | Rs.120 |
| 5. | The Law of Karma | Rs.100 |
| 6. | Losses caused by Desires | Rs.100 |
| 7. | Benefits of knowing what happens after death | Rs.100 |
| 8. | What is Meditation? | Rs.80 |
| 9. | True Path | Rs.80 |
| 10. | Why soul-knowledge ? | Rs.70 |
| 11. | What comes after death ? | Rs.70 |
| 12. | Learnings through the male and female births | Rs.70 |
| 13. | Who are Soul-murderes? | Rs.70 |
| 14. | How to improve Financial Status ? | Rs.60 |
| 15. | Wisdom is attained only through Meditation | Rs.60 |
| 16. | Brahma Jnan | Rs.60 |
| 17. | What is Intention? | Rs.50 |
| 18. | Why is this life? | Rs.50 |
| 19. | Shankaracharya's Jagrata panchakam | Rs.50 |
| 20. | Vegetarian Food Is Human Food | Rs.50 |
| 21. | Brahman means? | Rs.50 |
| 22. | How to become a master? | Rs.50 |
| 23. | How to become a champion ? | Rs.50 |
| 24. | Truth | Rs.50 |
| 25. | Three types of lives | Rs.50 |
| 26. | Are we residents of this world or the other world? | Rs.40 |
| 27. | Meditation for the Development of Students | Rs.40 |
| 28. | Non violence and vegetarianism | Rs.40 |

| | |
|---|---|
| REBIRTH (Tatavarthy Rajya Lakshmi) | Rs.150 |
| What is Ignorance (Avidya) ? | Rs.70 |

# நாம் இகலோகவாசிகளா? அல்லது பரலோகவாசிகளா?

முதன்மையாக நாம் ஒரு விஷயத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். அதாவது பிரபஞ்சத்தில் இரண்டு வகையான உலகங்கள் உள்ளன. 1. இகலோகம் 2. பரலோகம். கண்ணுக்குத் தெரியும் இந்த பூலோகத்தை இகலோகம் என்கிறோம். கண்ணுக்குத் தெரியாத உலகங்களை பரலோகம் என்கிறோம். கடவுள்கள், தேவதைகள் பரலோகத்தில் இருப்பதாகச் சொல்வார்கள்.

இப்போது நாம் எந்த உலகத்தைச் சேர்ந்தவர்கள்? எந்த உலகவாசிகள்? இவ்வுலகவாசிகளா? அல்லது பரலோகவாசிகளா? இந்த விஷயத்தை கட்டாயம் சிந்திக்க வேண்டிய அவசியம் உள்ளது. காரணம் நாம் இவ்வுலகவாசிகளாக இருந்தால் தற்போது நாம் அனைவரும் சிந்திப்பது... வாழ்ந்துகொண்டிருக்கிற விதம் ஒரு வகையில் சரியானது தான். ஆனால் நாம் உண்மையில் பரலோக வாசிகளாக இருந்தால், நாம் சிந்திக்க வேண்டிய, வாழ வேண்டிய விதம் வேறு விதமாக இருக்கும். ஆகவே கட்டாயம் நாம் இந்த விஷயத்தைப் பற்றி சிந்தித்து முடிவு செய்துகொள்ள வேண்டும். ஏனென்றால் யாருடைய நடத்தையைப் பார்த்தாலும் தாங்கள் இவ்வுலக வாசிகளைப் போலவே இருக்கிறார்கள்.

அதாவது எல்லோரும் தாங்கள் பூலோகவாசிகள் போல், இங்கேயே என்றும் தங்கிவிடப் போகிறவர்கள் போல் நடந்து கொள்கிறார்கள். இங்கே இருப்பவற்றிற்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அதாவது பூலோக செல்வங்கள், இன்பங்கள், பதவிகள், புகழ், செல்வாக்குகளை அடைவதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பது மட்டுமல்லாமல், அவற்றை அடைவதற்காக வாழ்க்கை முழுவதும் பாடுபடுகிறார்கள், கஷ்டப்படுகிறார்கள். அவற்றிற்காக அநியாயமாக நடந்து கொள்கிறார்கள். பாவங்களையும் செய்கிறார்கள். காரணம் தாங்கள் எல்லோரும் இங்கேயே இருப்பவர்கள் போல், என்றும் இங்கேயே தங்கிவிடப் போகிறவர்கள் போல் நினைக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல் இங்கே தங்களுக்கு இருக்கின்ற அனைத்தும் தங்களுடையது போல், இவை அனைத்தும் என்றென்றும் இருக்கும் என்ற மாயையில் இருக்கிறர்கள்.

இன்னும் இங்கே இருப்பவர்களில் சிலர் தங்கள் உறவினர்கள் என்றும், பகைவர்கள் என்றும், நண்பர்கள் என்றும் நினைக்கிறார்கள். இங்கே ஏதாவது கிடைக்கிறது என்றால் அதை நினைத்து சந்தோஷப்படுகிறார்கள், போகிறது என்றால் அதை நினைத்து வருத்தப்படுகிறார்கள். மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படுகிறார்கள், அவை எனக்கு இல்லையே என்று வருத்தப்படுகிறார்கள். எதிலாவது வெற்றி பெற்றால் ஜெயித்தோம் என்று துள்ளிக் குதிக்கிறார்கள். தோற்றுப் போனால் அவமானத்தோடு மனம் உடைகிறார்கள். இன்னும் எல்லோரும் தாங்கள் தனிநபர் என்று நினைத்துக் கொண்டு தானும், தன்னை சேர்த்தவர்களும் நன்றாக இருக்க வேண்டும் என நினைக்கிறார்கள், எல்லோரையும் விட சிறந்தவர்களாக வாழ நினைக்கிறார்கள். அதற்காக மற்றவர்களை ஏமாற்றுகிறார்கள், தாழ்வாகப் பார்க்கிறார்கள், அவமதிக்கிறார்கள், துன்பங்களுக்கு ஆளாக்குகிறார்கள். அவர்களுக்கு என்ன நடந்தாலும் கவலையில்லை, .இவையெல்லாம் பார்த்தால் நாம் எல்லோரும் 'பூலோகவாசிகள்' என்று நினைப்பது போல் இருக்கிறது.

உண்மையில் நாம் எந்த லோகவாசிகள்? எந்த லோகத்தைச் சேர்ந்தவர்கள்? முக்கியமாக நாம் பூலோகவாசிகளா? இல்லையா? என்பதை யோசிக்க வேண்டும். ஏனென்றால் ஒருவேளை நாம் பூலோகவாசிகள் இல்லாமல் பரலோகவாசிகளாக இருந்தால் நாம் செய்ய வேண்டிய காரியங்கள் வேறுவிதமாக இருக்கும். யோசிக்க வேண்டிய விதம் வேறு இருக்கும்.

நாம் எந்த லோகவாசிகள் என்றால், அதாவது எந்த லோகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை தெரிந்து கொள்ள வேண்டுமானால், முதலில் நாம் யார் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் இதுவரை பல பேரின் அபிப்பிராயம் தாங்கள் மனிதர்கள், தெரிகின்ற இந்த உடம்பே

தாங்கள் என்று நினைக்கிறார்கள். ஆகவே இந்த உடம்பிற்கு ஒரு பெயர் என்றால் சுப்பாராவோ... அப்பாராவோ... பாப்பாராவோ... இப்படி தங்களுக்கு பிடித்த பெயர்களை அவர்கள் வைத்துக் கொண்டு அந்தப் பெயர் தாங்கள் என்று நினைக்கிறார்கள்.

அந்தப் பெயரை யாராவது புகழ்ந்தாலும், பாராட்டினாலும் சந்தோஷப்படுகிறார்கள், பெருமை ஆடைகிறார்கள். அந்தப் பெயரை யாராவது திட்டினாலும், விமர்சித்தாலும், வருத்தப்படுகிறார்கள், சோர்ந்து போகிறார்கள், கோபப்படுகிறார்கள். மறுபடியும் ஏதாவது ஒரு விதத்தில் அதற்கு தகுந்த பதில் சொல்கிறார்கள். மறுபடியும் திட்டுவதோ? அல்லது பழிவாங்கும் செயல் செய்வதோ? செய்கிறார்கள். காரணம் அவன் தன்னைத் திட்டினான் என்பதால், விமர்சித்தான் என்பதால்.

இதெல்லாம் எதனால் என்றால் தெரியும் உடம்பே தான் என்று நினைப்பதால் தான். அது மட்டுமல்லாமல் அந்த உடம்புக்காக எவ்வளவோ பாடுபடுகிறார்கள். கஷ்டப்படுகிறார்கள். காரணம் அந்த உடம்பை சுகப்படுத்த வேண்டும், அழகாக வைத்திருக்க வேண்டும், ஆரோக்கியமாக கவர்ச்சிகரமாக வைத்திருக்க வேண்டும், வாழ்நாள் முழுவதும் உடம்பிற்கு எந்த குறையும் வரக்கூடாது என்று எவ்வளவோ தவிக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் பணம் வேண்டும் என்பதால், பணம் சம்பாதிப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.


அதனால் தான் ஒரு நாளில் பண சம்பாத்தியத்திற்கு அதிக நேரம் ஒதுக்குகிறார்கள். பண சம்பாத்தியமே தன் வாழ்க்கை இலட்சியமாக நினைக்கிறார்கள். காரணம் பணம் இருந்தால் தான் உடம்பை சுகப்படுத்த முடியும், பெரிய பெரிய மாளிகைகளில் வைத்திருக்க முடியும். ஏ/சி.க்களில், பெரிய படுக்கைகளில் படுக்க வைக்க முடியும், பெரிய பெரிய கார்களில் சுற்ற வைக்க முடியும். நல்ல நல்ல சுவையான உணவுகளை சாப்பிட வைக்க முடியும். சினிமா, டி.வி.க்கள் பார்க்க வைக்க முடியும். சென்ட், அகரபத்தி போன்ற நறுமணங்களை அனுபவிக்க முடியும். அற்புதமான இசையை கேட்க வைக்க

முடியும். இவையெல்லாம் உடம்போடு சம்பந்தப்பட்டவை, உடம்பை சுகப்படுத்துபவை. இனி இவைகளுக்கெல்லாம் பணம் வேண்டும் என்பதால்... அந்தப் பணத்தை சம்பாதிக்க மிகவும் முக்கியத்துவம் அளிக்கிறார்கள். பணத்தின் மீது மிகுந்த மோகம் கொண்டு இருக்கிறார்கள். காரணம், தன்னை ஒரு உடலாகவே கருதுவதால்.

அதனால் தான் பணத்தை சம்பாதிக்க செய்யக்கூடாத காரியங்களை செய்கிறார்கள். பலவிதமான மோசடிகளை செய்கிறார்கள். அதர்மமாக நடந்து கொள்கிறார்கள். அநியாயமாக, சட்டவிரோதமாக செயல்படுகிறார்கள். தங்கள் சக்தி, புத்திசாலித்தனங்களை வெளிப்படுத்துகிறார்கள். எப்போதும் "எவ்வளவு சம்பாதித்தோம்?" என்று பார்க்கிறார்கள். ஆனால் "எப்படி சம்பாதித்தோம்?" என்று பார்க்கமாட்டார்கள். இதெல்லாம் செய்ய காரணம், தங்களை உடலாகவே எண்ணுவதால் தான். தங்களை உடலாகவே எண்ணும் மனோபாவத்திலேயே இருப்பதினால் தான்.

ஆனால் உலகத்தில் இந்த மனோபாவமே இல்லையென்றால், அதாவது "உடலே நான்?" என்ற எண்ணமே இல்லையென்றால், உலகில் இத்தனை சட்டவிரோதங்கள், கொடூரங்கள், கொள்ளைகள், மோசடிகள் நடக்காது. இத்தனை அசம்பாவிதங்களும் இருக்காது. உலகத்தில் மனிதர்களின் நடத்தை முற்றிலும் மாறியிருக்கும். ஆகையால், உண்மையில் நான் யார்?என்பதை உறுதியாக தெரிந்துகொள்ளவேண்டும்.

அதனால் தான் ரமண மகரிஷி அவர்கள் ஒவ்வொருவருக்கும் "நீ யார் என்பதை தெரிந்து கொள்!" என்று கூறினார். அவர் அருகில் யார் எந்த பிரச்சினையுடன் வந்தாலும்... எந்த தவறான சூழ்நிலையை எடுத்துக் கொண்டு வந்தாலும்... அல்லது ஆலோசனையை கேட்க வந்தாலும்... அவர் முதலில் கூறுவது என்னவென்றால் "நீ யார் என்பதை தெரிந்து கொள்!". அங்கே உள்ளவர்களுக்கு அவர் ஏன் இதை மட்டுமே பதிலாக கூறுகிறார் என்ற சந்தேகமும் இருக்கும். அவர் அறியாமல் அதே கருத்தை மீண்டும் மீண்டும் கூறவில்லை. அந்த கூற்றில் தான் அனைத்து கேள்விகளின்



விடையும் உள்ளது என்பதை அவர் அறிந்திருந்தார். அதனால்தான் முதலில் "நீ யார் என்பதை தெரிந்துகொள்" என்று சொன்னார்.

இதனால் அவரது ஆலோசனையில் எவ்வளவு அர்த்தம் மறைந்து இருக்கிறதோ, அதில் எவ்வளவு ரகசியம் அடங்கியிருக்கிறதோ என நமக்கு புரிகிறது. ஆகவே முதலில் நாம் யார் என்பதை கண்டறிய வேண்டும். இது மிகவும் முக்கியமானது.

நாம் யார் என்பது நமக்கு எப்படித் தெரியும்? கொஞ்சம் யோசித்தால் தெரிந்துகொள்ளலாம். ஏனென்றால் நாம் அனைவரும் மனிதர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மனிதன் என்பது வெறும் உடல் மட்டுமல்ல, உடலுடன் சேர்த்து 'மனமும்', 'ஆன்மாவும்' உள்ளது. அதாவது 'உடல், மனம், ஆன்மா' ஆகிய மூன்றும் சேர்ந்ததுதான் மனிதன்.

எனவே இந்த மூன்றில் நான் யார்? என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதாவது உடலா, மனமா, ஆன்மாவா, அல்லது மூன்றும் சேர்ந்தது நானா? முதலில் இந்த விஷயத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும். அப்போதுதான் எதுவும் நம்மால் புரிந்துகொள்ளமுடியும். இதை அறிய வேண்டுமானால் அதைவிட முக்கியமான விஷயம் ஒன்றைத் தெளிவுபடுத்த வேண்டும்.

உண்மையில் நான் இறந்த பிறகும் இருப்பேனா? இருக்க மாட்டேனா? அதாவது எனக்கு இன்னும் வாழ்க்கை இருக்கிறதா? இல்லையா? இன்னும் பிறப்புகள் உள்ளனவா? இல்லையா? என்பதை முதலில் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இதை அறிய விரும்பினால், அனைவரிலும் சிறந்தவரான கண்ணபிரான் கூறிய பகவத் கீதையைப் பார்க்க வேண்டும். கீதையில்

**ஸ்லோ॥ ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யுர் த்ருவம் ஜன்ம ம்ருதஸ்ய ச|**
**தஸ்மாத் பரிஹார்யேர்தேந த்வம் சோசிதும் அர்ஹஸி॥**

**(ப.கீ. 2-27)**

தா:- எந்த விதமாகப் பார்த்தாலும் பிறந்தவனுக்கு இறப்பு நிச்சயம். இறந்தவன் மீண்டும் பிறக்காமல் இருக்க முடியாது. வேறு வழியில்லாத இந்த விஷயத்தில் துக்கப்படுவது உனக்குத் தகுதியானதல்ல.

இதன் மூலம் இறந்த பிறகும் ஒவ்வொருவரும் இன்னும் இருப்பார்கள் என்பது தெளிவாகிறது. இங்கு இறப்பது எது? இறப்பது உடல், உடலுடன் சேர்ந்து மனம் மட்டுமே. ஏனென்றால் மனம் உடலுடன் வருகிறது, உடலுடன் போகிறது. இறக்கும் தருணத்தில் மூன்று இரண்டாகப் பிரிகிறது. அதாவது இறந்த பிறகு இரண்டு நடக்கும் 'ஒன்று எரியும்', 'இரண்டாவது மேலே செல்லும்'. கவனித்தால் எரிவது 'உடல்'. மேலே செல்வது 'ஆன்மா' என்பது தெளிவாகிறது.

இங்கு மீண்டும் நாம் நம்மை நாமே கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டும். எரிவது நானா? மேலே செல்வது நானா? நிச்சயமாக மேலே செல்வதே நாம் என்று சொல்லலாம். காரணம் எரிகின்ற உடல் நாம் என்று நினைத்தால் நாம் இல்லை என்று அர்த்தம் . ஆனால் ஸ்ரீ கிருஷ்ண பகவான் தந்த அறிவிப்பின் படி, நமக்கு இன்னும் பிறவிகள் இருப்பதால், நாம் இன்னும் இருப்போம்; இருப்பது மேல்நோக்கிச் செல்லும் 'ஆன்மா' என்பதால், 'ஆன்மா' தான் நாம் என்று தெளிவாகிறது. அதாவது நாம் அனைவரும் 'ஆன்மா'க்களே தவிர உடல்கள் அல்ல என்பது தெளிவாகிறது.

இப்போது 'ஆன்மா' நாம் என்றால் 'ஆன்மா'வின் நிலையான இடம் எது? என்றால் 'பரம்'. இதன் மூலம் "நாம் அனைவரும் இம்மை வாசிகள் அல்ல, பரலோக வாசிகளே" என்பது தெளிவாகிறது.

இப்போது நமக்கு இன்னொரு கேள்வி எழுகிறது. நாம் அனைவரும் பரலோக வாசிகளாக இருந்தால் இம்மையில் அதாவது இந்த பூமியில் ஏன் இருக்கிறோம்? நம்முடைய நிலையான இடமான பரத்திலிருந்து இம்மைக்கு ஏன் வந்தோம்?

வந்து இந்த உடலை ஏன் எடுத்தோம்? இந்த உடலுடன் என்ன செய்ய வந்தோம்? இறந்தவர்களுக்குச் செய்யும் கர்மாக்காண்டங்களின் உட்பொருள் என்ன? போன்ற விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தக் கேள்விகளுக்கு நாம் விடை தெரிந்து கொள்ள முடிந்தால் நாம் பூமியில் என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும். எப்படி வாழ வேண்டும் என்று தெரியும். தெரிந்து வாழும் வாழ்க்கையே சரியான வாழ்க்கை, நல்ல பயனுள்ள வாழ்க்கை ஆகும். ஆனால் அப்படி இல்லாமல் வாழும் வாழ்க்கை இம்மையில் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் அது வீணே. ஒரு வகையில் பார்த்தால் அந்தப் பிறவியே வீணடித்தது போலவே ஆகும்.

அப்படி நாம் பரத்திலிருந்து ஏன் வந்தோம்? இம்மையில் என்ன செய்ய வந்தோம்? கொஞ்சம் தெரிந்து கொள்வோமா? இதற்கு முன்பு நாம் பரம் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும். இம்மையில் கோடிக்கணக்கான, பலவிதமான வீடுகள் இருப்பது போல, பரத்திலும் கோடிக்கணக்கான பலவிதமான உலகங்கள் உள்ளன. அதாவது பூமியில் குடிசைகள், ஓட்டுவீடுகள், மாளிகைகள், பங்களாக்கள், அரண்மனைகள் போன்ற பலவிதமான வீடுகள், அதாவது வசதிகள் இல்லாதவை, வசதிகள் உள்ள வீடுகள் எப்படி இருக்கிறதோ, அப்படியே பரத்திலும் உயர்ந்த உலகங்கள், அவற்றுக்கு எதிரான கீழ் உலகங்களும் உள்ளன. வசதிகள் உள்ளவற்றை உயர்ந்த உலகங்கள் என்கிறோம், குறைவாக உள்ளவற்றைக் கீழ் உலகங்கள் என்கிறோம்.

இந்தக் கோடிக்கணக்கான உலகங்களை யோகிகள் 7 மேல் உலகங்களாகவும் 7 கீழ் உலகங்களாகவும் பிரித்தனர். அவற்றையே சதுர்தச புவனங்கள் அல்லது பதினான்கு புவன பாண்டங்கள் என்கிறோம். இவையே நமக்குப் புராணங்களிலும் சொல்லப்பட்டுள்ளன. அவை 1. பூலோகம் , 2. புவர்லோகம், 3. சுவர்லோகம், 4. ஜனலோகம், 5. மஹாலோகம்,6. தபோலோகம், 7. சத்ய லோகம் எனப்படும் ஊர்த்வலோகங்கள். அதுபோலவே 1. அத்தலம்,2. விதலம், 3. சுதலம், 4.ரஸாதலம், 5. மஹாதலம், 6.

தலாதலம், 7. பாதாள லோகங்கள் என்ற அதோலோகங்களாக யோகிகள் பிரித்தனர்.

அதாவது யாரேனும் பூமியில் தங்கள் தேகத்துடன் மோசடிகள், குற்றங்கள், தவறுகள் செய்தாலும்... மற்றவர்களையோ, விலங்குகளையோ துன்புறுத்தினாலும் மாமிச உண்டு உயிரினங்களின் துன்பத்திற்கு காரணமானாலும், அது மட்டுமல்லாமல் பாவங்களைச் செய்து தூய்மையற்றவர்களாகவும், அநீதி இளைப்பவர்களாகவும் வாழ்ந்தாலும், இறந்துபோன பிறகு அதோலோகங்களுக்கு செல்வார்கள். அப்படி இல்லாமல் பரிசுத்தமாக, தர்மமாக வாழ்ந்துகொண்டு... யாரையும் ஏமாற்றாமல், அஹிம்சை கடைபிடித்து... எல்லா உயிரினங்கள் மேல் தயவு கொண்டு, சக மனிதர்களை மட்டும் அல்லாமல். எல்லா உயிர்களையும் நேசித்து எல்லோருக்கும் நல்லது நடப்பது போல் புண்ணிய காரியங்கள், நற்செயல்கள் செய்பவர்கள் இறந்துபோன பிறகு ஊர்த்வலோகங்களுக்கு அதாவது உயர்ந்த லோகங்களுக்கு செல்வார்கள்.

பூமியில் செய்து கொண்டதைப் பொறுத்து பரலோகத்தில் ஏதோ ஒரு லோகத்தில் இருப்பார்கள், அதாவது பூமியில் புண்ணிய காரியங்கள், தியான, யோக சாதனைகள் செய்தவர்கள், இறந்துபோன பிறகு அதாவது உடலை விட்ட பிறகு ஊர்த்வ லோகங்களுக்கு சேருவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு உயர்ந்த லோகவாசிகளின் சேர்க்கையும் கிடைக்கும். அவர்களிடமிருந்து சிருஷ்டியில் உள்ள உயர்ந்த ஞானம் பெறும் வாய்ப்பு கிடைக்கும்.

அதுபோலவே பாவங்கள் செய்தவர்கள் அதோலோகளை சேருவார்கள். அவர்கள் அங்கிருப்பவர்களின் சேர்க்கையே பெறுவார்கள். அங்கே தான் அவர்களுக்கு பூமியில் செய்த தவறுகளைப் பற்றி, பாவங்களைப் பற்றி தெரியவரும். எது எப்படி இருந்தாலும் பெரிய பெரிய புண்ணிய காரியங்கள் செய்த மகான்கள், குறிப்பாக சாதனைகள், தவம், தியான சாதனைகள் செய்த சாதகர்கள், ரிஷிகள், யோகிகள் ஊர்த்வ லோகங்களில்

இருப்பார்கள். பாவங்கள்,ஹிம்சை, மோசடிகள் செய்தவர்கள் அதோலோகங்களில் இருப்பார்கள்.

நாம் புராணங்களை பார்த்தால் இந்த விஷயமே தெரியும். எல்லோருக்கும் உபகாரம் செய்யும் தேவர்கள் ஊர்த்வ லோகங்களான சொர்க்க லோகத்தில் இருப்பார்கள். அபகாரம் செய்பவர்கள், ஹிம்சை செய்யும் அரக்கர்கள் பாதாள லோகத்தில் இருப்பார்கள் என்கிறார்கள். அது மட்டுமல்லாமல் தேவர்கள் விரும்பும் உணவு சுவாசாஹாரம் அதாவது தியானம், அரக்கர்கள் விரும்பும் உணவு இரத்தமாமிசங்கள் என்கிறார்கள்.

எது எப்படி இருந்தாலும் பரலோகத்தில் யார் எந்த லோகத்தில் இருந்தாலும் இன்னும்... இன்னும்...மேலே மேலே...உயர்ந்த உலகங்களுக்குச் செல்ல விரும்புகிறார்கள். அதாவது 'இருக்கும் உலகத்திலிருந்து உயர்ந்த உலகங்களுக்கு' சென்றடைய வேண்டும் என்று பரலோகத்தில் இருக்கும்போதே நினைக்கிறார்கள். அதாவது "இருக்கும் நிலையிலிருந்து உயர்ந்த நிலை" அடைய வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

தற்போது மக்களிடம் இருக்கும் நம்பிக்கை என்னவென்றால் மனிதன் தான் வாழ்ந்து கொண்டிருக்கும்போது எப்படி வாழ்ந்தாலும் பரவாயில்லை, எந்தவிதமான கர்மங்கள் செய்தாலும், பாவங்கள் செய்தாலும் பரவாயில்லை, இறந்த பிறகு சடங்குகள் செய்தால் போதும், உயர்ந்த உலகங்களை அடையலாம் என்று நினைக்கிறார்கள்.

ஆகவே வாழ்ந்து கொண்டிருக்கும்போது தாங்கள் செய்யும் கர்மங்களை பற்றி, செயல்களை பற்றி சிந்திப்பதில்லை. இறந்து போனபிறகு செய்யும் சடங்குகள் பற்றி மட்டும் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள்.

ஆனால் வாழ்ந்து கொண்டிருக்கும்போது தான் செய்த கர்மங்களின் பலன்களே தன்னுடன் வரும், அத்துடன் இதைத் தொடர்ந்து வரும் வாழ்க்கைக்கு உதவுமே தவிர இறந்த பிறகு தன் பெயரில் யார் என்ன செய்தாலும் அவை தனக்குப் பொருந்தாது, தன்னுடன் வராது என்று தெரிந்து கொள்ள முடியாமல் போகிறார்கள். அதனால்தான் ' என்ன செயல் செய்தார்களோ அதற்கேற்ற பலன் என்றார்கள்.

இங்கே கொஞ்சம் யோசித்தால் கர்மகாண்டம் என்ற பெயரில் மற்றொருவர் செய்யும் கொஞ்சநஞ்சமான தானங்களே தம்மை எத்தனையோ உயர்ந்த உலகங்களை அடையச் செய்ய முடியும் என்றால், மேலும் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே அப்படிப்பட்ட தானங்கள், புண்ணிய கர்மங்கள் தானே நேரடியாக இன்னும் அதிகமாகச் செய்து கொண்டால் இன்னும் பெரிய நிலையை அடையலாம். ஆனால் வாழ்ந்து கொண்டிருக்கும்போது ஏன் செய்வதில்லை? தான் செய்யும் செயல்கள் பற்றி ஏன் யோசிப்பதில்லை?

ஆகவே கர்மகாண்டங்களின் உட்பொருளைத் தெரிந்து கொண்டால் அதாவது இறந்த பிறகு உயர்ந்த உலகங்களை அடைய வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் கட்டாயமாக இந்த விஷயங்களை சிந்திக்க வேண்டும்.

ஆகவே தெரிந்து கொள்ளுங்கள்! பரலோகத்தில் உயர்ந்த உலகங்களை அடைய விரும்பினால், பூமிக்கு வந்து மனித தேகத்தை எடுக்க வேண்டும், மனித தேகத்துடன் புண்ணிய காரியங்கள், தியான சாதனை மூலம் பெற்ற சக்தி ஆகியவற்றால் உயர்ந்த லோகப்பிராப்தி கிடைக்குமே தவிர வேறு வழியில்லை. அதனால்தான் முனிவர்கள், யோகிகள் தியானம் செய்வார்கள், தியானத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

தேவர்களாக இருந்தாலும் சரி, உயர்ந்த உலகங்களை அடைய விரும்பினால் பூமிக்கு வந்து மனிததேகம் எடுத்து, தியான சாதனை செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். ஏன் என்றால் தியான சாதனை செய்யக்கூடிய சக்தி மனித தேகத்திற்குத்தான் இருக்கிறது தவிர வேறு எந்த தேகத்திற்கு இல்லை. அதனால்தான் மனித பிறவி அவ்வளவு உயர்ந்தது என்றும், ஆகவே மனித பிறவி பெறுவது அரிது என்று சொல்வார்கள்.

அவ்வாறு பரத்தில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும், எந்த உலகத்தில் இருந்தாலும், நிலையான சத்யலோகம் அடைவதற்கு விரும்புகிறார்கள். அதை அடைவதற்கு முன்பு, எந்த உலகத்தில் இருந்தாலும், மீண்டும் பூமிக்கு வந்து,

பூமியில் துன்பங்கள், துயரங்களை அனுபவிக்க வேண்டும். இந்த துன்பங்களிலிருந்து, துயரங்களிலிருந்து நிரந்தரமாக வெளியேற வேண்டுமானால், அனைத்திலும் உயர்ந்த சத்யலோகம் அடைவது தவிர வேறு வழியில்லை. நாம் வழிபடும் கடவுள்களும் சத்யலோகத்தில் வாழ்பவர்களே. அதனால்தான் பூமியில் உள்ள அனைவரும் கடவுள்களை அடைய விரும்புகிறார்கள், கடவுளின் ராஜ்யத்தை அடைய விரும்புகிறார்கள்.

இந்த விஷயத்தைத்தான் கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறுகிறார்.

**ஸ்லோ॥ ஆ ப்ரஹ்ம புவநால்லோகா꞉ புநராவர்திநோऽர்ஜுந!**
**மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே॥**

**(ப. கீ. 8-16)**




தா:- ஓ அர்ஜுனா! அந்த பிரம்மலோகம் வரையுள்ள லோகங்களுக்குச் சென்றாலும் மீண்டும் பிறப்பு எடுக்க வேண்டும். ஆனால் என்னை அடைந்தால் (அதாவது நான் இருக்கும் சத்யலோகம் அடைந்தால்) மீண்டும் திரும்பி வர மாட்டீர்கள். அதாவது பிறப்பு இருக்காது.

ஸ்ரீ கிருஷ்ண பகவானின் இந்த செய்தியைப் புரிந்து கொள்ளாமல் பூமியில் மனிதர்கள் புண்ணிய கர்மங்களைச் செய்கிறார்கள். புண்ணியம் செய்தால் மோட்சம் கிடைக்கும் என்று நினைக்கிறார்கள். ஆனால், புண்ணியம் செய்தால் புண்ணிய உலகங்களை அடைவார்கள். புண்ணியம் முடிந்தவுடன் மீண்டும் பூமிக்கு வந்து விடுவார்கள். சத்யலோகம் அடைய முடியாது. பகவானை அடைய முடியாது. மோட்சம் பெற முடியாது. பகவத் கீதையில் உள்ள இந்த சுலோகத்தைப் பார்ப்போம்.

**ஸ்லோ॥ தே தம் புக்த்வா ஸ்வர்கலோகம் விஷாளம்**
**க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விஷந்தி।**
**எவம் திரயீ தர்மம் அநு ப்ரபன்னா**
**கதாகதம் காமகாமா லபந்தே॥ (ப. கீ. 9-21)**

தா:- அவர்கள் (அத்தகைய சொர்க்கவாசிகள்) பரந்த சொர்க்கத்தில் அனுபவித்து, புண்ணியம் குறைந்த பிறகு மீண்டும் மனித உலகில் பிறக்கிறார்கள். இவ்வாறு வேதோக்த கர்மத்தை (யஞா, யாகாதி புண்ணிய கர்மங்கள்) செய்பவர்கள் பிறப்பையும் இறப்பையும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டியது, எவ்வளவு புண்ணிய காரியங்கள் செய்தாலும், புண்ணிய காரியங்களில் சிறந்த யாகங்கள், யஞுங்கள் செய்தாலும் புண்ணிய உலகங்களுக்குச் செல்ல முடியும். ஆனால் அதற்கு மேல் லோகங்களுக்கு செல்லமுடியாது.



அதனால் தான் பத்ரிஜி அவர்கள் "புண்ணியம் செய்தால் புண்ணிய லோகங்களை அடைவீர்கள், தவம் செய்தால் தபோலோகங்களை அடைவீர்கள், ஆனால் தியானம் செய்தால் மட்டுமே சத்திய லோகத்தை அடைவீர்கள்." என்று கூறுவார்கள்.

யாராக இருந்தாலும் படைப்பில் எல்லாவற்றிற்கும் மேல் உள்ள சத்திய லோகத்தை அடைவதற்காகவே முயற்சிக்க வேண்டும். இல்லையெனில் மீண்டும் மீண்டும் பூமிக்குத் திரும்புவீர்கள், மனித பிறவியை எடுக்க வேண்டிய சூழ்நிலை வரும். இதுவே "புனரபி ஜனனம், புனரபி மரணம்" என அழைக்கப்படுகிறது.

அப்படியே மீண்டும், மீண்டும் பூமிக்கு வரலாம். ஆனால் பூமியில் பிறந்த பின் பல்வேறு சிரமங்களைச் சந்திக்க வேண்டும். ஏராளமான துன்பங்களை எதிர்கொள்ள வேண்டும். நரகமெனும் அனுபவங்களை கடக்க வேண்டிய சூழ்நிலையைச் சந்திக்க வேண்டும். நிதானமாக சிந்தித்தால், மனித வாழ்க்கை அவ்வளவு எளிதானது அல்ல என்பதை உணரமுடியும்.

பூமியில் எவ்வளவு இன்பங்கள் இருந்தாலும், அந்த இன்பங்களுடன் நோய்கள், துன்பங்கள் மற்றும் துக்கங்களும் இணைந்தே இருக்கும். அதனால்தான் ரிஷிகள், யோகிகள் பூமியின் வாழ்க்கையிலிருந்து நிரந்தர விடுதலை பெற

முயன்றார்கள். தியான சாதனையை அதிக முக்கியத்துவத்துடன் எடுத்துக் கொண்டார்கள், மோக்ஷத்தை அடைந்து உலகில் பெரியவர்களாக கீர்த்தி பெற்றார்கள்.




பரலோகத்திலிருந்து வந்த நாம் பரலோகத்தில் இருக்கும் போது, உயர்ந்த உலகங்களை அடைய வேண்டும் என்று நினைக்கிறோம். அதற்காக தியான சாதனை செய்வதற்காக பூமிக்கு வருகிறோம். வந்து ஏதாவது ஒரு உடலை எடுத்துக் கொண்ட பிறகு (பிறந்த பிறகு) எல்லாம் மறந்து விடுகிறோம். நாம் பூலோகவாசிகள் என்று நினைத்துக்கொண்டு பூலோக போகங்களை அனுபவிப்பதற்காக, பூலோகத்தில் சிறந்தவர்கள் ஆவதற்காக முயற்சிக்கிறோம்.

யாரைப் பார்த்தாலும், எந்நேரமும் பணம், பதவிகள், நல்ல வேலைகளைச் சம்பாதித்து, இம்மையில் அதாவது பூமியில் உயர வேண்டும் என்று முயற்சி செய்கிறார்களே தவிர, பரலோகத்தில் உயர்வதற்காக அதாவது சிறந்தவர்களாவதற்கு எந்த முயற்சி செய்வதில்லை. இம்மையில் சம்பாதிப்பதற்காக பாடுபடுகிறார்கள், ஆனால் பரலோகத்தில் வேண்டியது பெற முயற்சிக்க மறுக்கின்றனர். இகலோகத்தின் இன்பங்களையே பெரியது என்று நினைக்கின்றனர். ஆனால் பரலோக இன்பங்கள் அதைவிட மேலானவை என்பதை உணருவதில்லை.

தற்காலிகமானவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர், நிரந்தரமானவற்றைப் பற்றிய ஆர்வத்தை மறந்து விடுகின்றனர். இகலோக செல்வத்திற்கே பெரும் முக்கியத்துவம் கொடுத்து பரலோக ஞானத்திற்குத் தேவையான மதிப்பை அளிக்க மறந்து விடுவார்கள். "நாம் இகலோக வாசிகள்" என்று எண்ணி, நாம் பரலோக வாசிகள் என்பதையும் மறந்து விடுகின்றனர். இகலோக

வாழ்க்கை பற்றியே சிந்திக்கின்றனர், ஆனால் பரலோக வாழ்வின் சிறப்பினை கவனிக்க மறுக்கின்றனர்.

இகலோகத்தில் மொழியின்மீது , சாதிமீது, இடத்தின் மீது, மதம் மீது, தேசத்தின் மீது இருக்கிற அன்பை வெளிப்படுத்தி, உண்மையான ஆன்மலாபத்தை மறந்து விடுகிறார்கள். "என் பணம், என் வீடு, என் நிலம், என் தொழிற்சாலை, என் செல்வம்" என்று பெருமையாகப் பேசுவார்கள், ஆனால் "என் ஆன்மா" என்று ஒரு முறை கூட நினைக்கமாட்டார்கள்.

அதற்கும் மேலாக, "என் மனைவி, என் கணவன், என் குழந்தைகள், என் உறவுகள், என் நண்பர்கள்" என்று உறவுகளின் மீது மட்டுமே அன்பு காட்டி, ஆன்மாவை மறந்து விடுகிறார்கள். அனைவரின் நலனுக்காக பலவற்றைச் செய்வார்கள், பரிதவிப்பார்கள், ஆனால் ஆன்மா பற்றி பொறுப்பற்றவர்களாக இருக்கிறார்கள். அதனால், அவர்கள் வாழும் வாழ்க்கையில் எவ்வளவு இழந்துள்ளார்கள் என்பதை உணரமாட்டார்கள்.

அதனால் தான் "தன்னை மறந்து மற்றவர்களுக்காக மட்டுமே வாழ்வது ஒரு தர்மம் இல்லை" என்று கூறப்படுகிறது. இதற்காகவே கௌதம புத்தர் சொல்லுகிறார், "மற்றவர்களை உயர்த்த அல்ல, உங்கள் ஆன்மாவை உயர்த்திக் கொள்ளுங்கள்" என்று.

ராமகிருஷ்ணா மிஷன் இவ்வாறு கூறுகிறது

"ஆத்மநோ மோக்ஷாயச, ஜகத் ஹிதாயச" அதாவது முதலில் ஆன்மாவுக்கு மோட்சம், அதன் பிறகு உலக நன்மை என்று. யாரைப் பார்த்தாலும் ஆன்மாவை உயர்த்திக் கொள்ளுங்கள் என்றே சொன்னார்கள். அதாவது தன்னைத் தான் உயர்த்திக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள்.

ஆனால் உலகில் ஆன்மா பற்றி யோசிக்காமல் உடலுக்கே முக்கியத்துவம் கொடுத்து வாழ்நாள் முழுவதையும் கழித்து விடுகிறார்கள். வாழ்க்கையில் எவ்வளவோ சம்பாதிக்கிறார்கள். அதை சேர்த்து வைக்கிறார்கள். கடைசியில் அனைத்தையும் விட்டுவிட்டு இம்மையில் இருந்து வெளியேறுகிறார்கள். அதாவது உடலை விட்டு விடுகிறார்கள், அதாவது இறந்து விடுகிறார்கள். மீண்டும் பரலோகத்திற்குச்

சென்ற பின் தெரிகிறது நான் பரலோகவாசியே தவிர பூலோகவாசி இல்லை, பூவுலகில் இருப்பவன் நான் அல்ல, பூவுலகம் என்பது தற்காலிகமான இடம் என்று புரிகிறது. ஆனால் அதற்குமுன்பே எல்லாம் முடிந்து விடும். இனிமேல் செய்வதற்கு எதுவும் இருக்காது. அப்போது எவ்வளவு நல்ல வாய்ப்பை வீணடித்து விட்டோம் என்று வருத்தப்பட்டாலும் பிரயோஜனம் இருக்காது. கொடுக்கப்பட்ட வாய்ப்பு கைநழுவிகிறது. மீண்டும் இன்னொரு வாய்ப்புக்காக காத்திருந்து, புதிய உடலுக்காக முயற்சிப்பார்கள்.

மனிதப் பிறவி எடுத்துவிட்டோம். இனி என்ன? நாம் இறக்கும் தருவாயில் நம்முடன் எதுவும் வராது. நாம் சேர்த்து வைத்த செல்வங்கள், நாம் அடைந்த பெருமைகள் எதுவும் நமக்குப் பயன்படாது. இவையாவும் இங்கேயே தங்கிவிடும். இறந்த பிறகு மனைவி வாசல் வரைதான் துணை வருவாள். உறவினர்கள், நண்பர்கள் சுடுகாடு வரைதான் வருவார்கள். நாம் செய்த நல்வினைகளும், தீவினைகளும் மட்டுமே நம்மோடு வரும்.

ஆகவே நாம் இம்மையில் வாழும்போதே நான் இம்மை வாசியா? அல்லது பரமை வாசியா? என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். சிந்தித்துப் பார்த்தால் நாம் அனைவரும் பரமை வாசிகளே என்பது தெளிவாகும். ஏனெனில் நாம் அனைவரும் ஆன்மாக்களே. அப்படியானால் நாம் பர வாசிகளாக இருக்கும்போது இம்மையில் நாம் என்ன செய்ய வேண்டும்? எதைச் செய்தால் பரலோகத்தில் நன்மை அடைவோம்? என்பதை சிந்திக்க வேண்டும். முக்கியமாக தியான சாதனை செய்ய வேண்டும். தியானம் ஒன்றே ஆன்மாவுக்கு, அதாவது நமக்கு லாபம் தரும், உயர்ந்த உலக வாழ்வைத் தரும். தியான சாதனை மட்டுமல்ல, தியான போதனையும் பரத்திற்கு லாபமே. தியானம் சம்பந்தப்பட்ட அனைத்து வேலைகளில் பங்கு கொள்வதும், அவற்றிற்கு உதவி செய்வதும், ஆன்மா சம்பந்தப்பட்ட புத்தகங்களைப் படிப்பதும், அப்படிப்பட்டவர்களுடன் சகவாசம் வைத்துக் கொள்வதும் பரலோகத்தில் உயர்வுக்கு லாபகரமானதே. ஆகவே தியானத்தின்

மகத்துவத்தை உணர்ந்து தினமும் தியானம்செய்யுங்கள். முக்கியமாக தினமும் இந்த விஷயத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

**“இன்று நான் என் ஆன்மாவுக்காக என்ன செய்தேன்?”**




தவறாமல் ஒவ்வொருவரும் இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொள்ள வேண்டும். காரணம் நீங்கள் ஆன்மாவுக்காக இல்லாமல் நாள்முழுவதும் என்ன செய்தாலும்? எதை சம்பாதித்தாலும்? எதை சாதித்தாலும், எவ்வளவு கஷ்டப்பட்டாலும்? எல்லாமே வீண்தான். ஆகவே “உங்களைப் பற்றி அதாவது ஆன்மாவுக்கு என்ன செய்தேன்?” என்று யோசிக்க வேண்டும்.



யாஞவல்க முனிவர் “ஈஷாவாஸ்ய உபநிஷெத்”இல் இந்த விஷயத்தை வலியுறுத்துகிறார்.

“எவர் ஆன்ம கொலைகாரர்களோ அதாவது தன் நிஜவடிவான ஆன்மதத்துவ ஸாக்ஷாத்காரத்தை அலட்சியம் செய்பவர்களோ! அவர்கள் மரணத்திற்குப் பிறகும் அஞ்ஞான இருளால் சூழப்பட்ட ராக்ஷஸ பிறவிகளை அடைவார்கள்".

ஆகவே புத்திசாலிகள் யார் என்றால்... "ஆன்மாவுக்காக அதாவது தனக்காக உடலை உபயோகித்துக்கொள்வார்கள் தவிர உடலுக்காக ஆன்மாவை பலி கொடுக்கமாட்டார்கள்”. அனைத்து யோகிகளும் ஆன்மாவுக்காக உடலை தீவிர தியானம்

செய்யவைத்தார்கள். அதனால்தான் "பரோபகாரார்த்தம் இதம் சரீரம்" என்றார்கள். அதாவது (பர + உபகாரம் = பரோபகாரம்). பரலோக உபகாரத்திற்காகவே இந்த சரீரம் என்று அர்த்தம்.

ஆகவே தெரிந்து கொள்ளுங்கள் "ஆன்மா தனக்காக உடலை எடுத்துக் கொண்டதே தவிர, உடல் ஆன்மாவைத் கொண்டு வரவில்லை". இதை உணர்ந்தால் ஒவ்வொருவரும் உடலால் தியானம் செய்வார்கள்.

அதுமட்டுமல்ல தியானம் செய்தால் பரத்தில் மட்டுமல்ல. இம்மையிலும் கூட லாபமே என்று தெரிந்து கொள்ள வேண்டும். பரலோகம் எப்படி காட்சி தராதோ அதே போல் தியான சாதனையின் பலனும் கண்ணுக்குத் தெரியாது. சிறிய உதாரணம் எடுத்துக் கொள்வோம். ஒரு நாட்டுக்கு அதிபதியை எடுத்துக்கொண்டால் நாட்டில் எல்லோரைவிட அவர் செல்வந்தர், அல்லது பெரிய பணக்காரர் என்று வைத்துக் கொள்வோம். பூமியில் நிறைய சம்பாதித்தார், நிலங்கள், கட்டிடங்கள், அரண்மனைகள் போன்றவற்றை நிறைய சம்பாதித்தார். ஆனால்
அவர் பரத்தைப் பற்றி யோசிக்கவில்லை, அதற்காக எதுவும் செய்யவில்லை. கடைசியில் தியானம் கூட செய்யவில்லை. அப்படிப்பட்டவர்கள் இறந்து போனால் ஏதோ சாதாரணமான லோகத்திற்குச் செல்வார்கள்.

அதே ஒரு ரிக்ஷாக்காரன் அல்லது ஆட்டோ டிரைவர் அல்லது சாதாரண குமாஸ்தா தினமும் ஒரு மணி நேரம் தியானம் செய்தார் என்று வைத்துக் கொள்வோம். அவர் இறந்த பிறகு பூலோகத்தில் செல்வந்தர்களாகப் போற்றப்படும் பணக்காரர்களைக் காட்டிலும், பதவிகளில் இருப்பவர்களைக் காட்டிலும், பரத்தில் பல லக்ஷலோகங்கள் மேலே இருப்பார். அதாவது இம்மையில் செல்வந்தவர்களாக இருந்தாலும் தியானம் செய்யாததால் பரத்தில் தாழ்ந்தவராகி விட்டார். ஆனால் ஓர் "சாமானியன்" தியான சாதனை செய்வதினால் பரத்தில் மகானாகிறான். அதாவது "தற்காலிகமாக பெரியவன் நிரந்தரமாக சிறியவனாகிறான்". ஆனால் "தற்காலிகமாக சிறியவன் நிரந்தரமாக பெரியவனாகிறான்". ஆகவேதான் ஸ்ரீ

கிருஷ்ண பகவான் அர்ஜுனனை "தியான யோகியாகனும் " என்று கூறியது நிகழ்ந்தது. தியானம் செய்யும் யோகி சாதனை இலக்கை அடையாவிட்டாலும்... இடையில் இறந்துவிட்டாலும்... அதாவது உடலை விட்டு நீங்க நேரிட்டாலும்... மிகுந்த லாபத்தை அடைகிறான் என்று கீழே உள்ள சுலோகங்கள் கூறுகின்றன.

**சுலோகம்:**

**ப்ராப்ய புண்யக்ருதாம் லோகா நுஷித்வா ஸ்வாதி ஸமா: ।**
**சுசீநாம் ஸ்ரீமதாம் கேஹே யோகப்ருஷ்டோ ப்ரஜாயதே**

**(ப.கீ.6-41)**

தா: அப்படிப்பட்ட யோகப்ருஷன் (மரணத்திற்குப் பின்) புண்ணியம் செய்தவர்களின் உலகை அடைந்து, அங்கு பல வருடங்கள் வாழ்ந்து, பின்னர் நல்லொழுக்கம் உடையவர்களும் செல்வந்தர்களுமான வீட்டில் பிறக்கிறான்.

**அதவா யோகினாமேவ குலே பவதி தீமதாம்**
**ஏதத்தி துர்லபதரம் லோகே ஜன்ம யதித்ருசம் (ப.கீ.6-42)**



தா: அல்லது ஞானம் பெற்ற யோகிகளின் குலத்திலேயே பிறக்கிறான். அப்படிப்பட்ட பிறப்பு இந்த லோகத்தில் மிகவும் அரிதானது.

இங்கு நாம் கொஞ்சம் யோசிக்க வேண்டும். தியானம் செய்பவர்களுக்கு பொதுவாக எந்த லாபங்களும் வெளியே தெரிவதில்லை. அவர்களுக்கு செல்வச் சேர்க்கை அதிகமாக இருக்காது. அவ்வளவு ஏன் பொதுவாக செல்வம் குறைவாக உள்ளவர்களே தியானம் செய்து கொண்டிருப்பார்கள். அவர்களைப் பார்த்து மற்றவர்கள் என்ன? இவர்கள் எதையும் செய்யாமல்... எதையும் சம்பாதிக்காமல்... எதையும் அனுபவிக்காமல்... எப்போதும் தியானம் செய்து கொண்டிருக்கிறார்கள், அறிவில்லாதவர்கள் போல் இருக்கிறார்களே! என்று தியானம் செய்பவர்களைப் பார்த்து அனைவரும் நினைத்துக் கொண்டிருப்பார்கள், சொல்பவர்களும் கூட இருக்கிறார்கள்.

ஆனால் அப்படி தியானம் செய்பவர்கள் எவ்வளவு பெரியவர்கள்! அவர்கள் மறுமையில் எவ்வளவு உயர்ந்த

உலகங்களை அடைவார்கள்! மீண்டும் அவர்களுக்கு எவ்வளவு உயர்ந்த பிறப்பு கிடைக்கும்! மேலே உள்ள சுலோகங்கள் மூலம் பகவான் தெரிவிக்கிறார். அவர் சொன்னபடி மறுபிறவியில் முயற்சியின்றி செல்வந்தர்களின் வீடுகளில் பிறப்பார்கள், பெரிய ஞானம் பெற்ற யோகிகளின் வீடுகளில் பிறப்பார்கள், அப்படிப்பட்ட பிறப்பு மிகவும் அரிதானது என்று அவர் கூறியுள்ளார். ஆகவேதான் அவர் எல்லோரையும் விட 'யோகி' பெரியவன் என்கிறார். யாகம் செய்பவர்களை விட யோகி பெரியவர் என்று கூறப்படுவதற்கு இதுவே காரணம். அதனால் தான் கிருஷ்ணர் அர்ஜுனனை யோகி ஆகச் சொன்னார். பின்வரும் ஸ்லோகத்தைப் பார்ப்போம்.

**ஸ்லோ: தபஸ்விப்யோ திகோ யோகீ ஜ்ஞானிப்யோ பி மதோ திக:**
**கர்மப்ய: சா திகோ யோகீ தஸ்மாத் யோகீ பவார்ஜுன ||**
**(ப.கீ. 6-46)**

தா: ஓ அர்ஜுனா! தபசு புரிவோரைக் காட்டிலும், ஞானமுள்ளோரைக் காட்டிலும், யாகம் மற்றும் அந்நிய மதஸ்தர்க்கான கர்மங்களைச் செய்யும் அவர்களைக் காட்டிலும், யோகி மிகச் சிறந்தவராக இருக்கிறார். ஆகவே, நீ யோகியாக இரு.

இதன் மூலம் 'தியானம்' செய்யும் 'யோகி' எவ்வளவு உயர்ந்தவர் மற்றும் அதிர்ஷ்டசாலி என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. உலகத்தின் பார்வையில் சாமானியர்களாக இருக்கலாம். ஆனால் அனைவரையும் விட அவர்கள் உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை பகவான் சொன்னதன் மூலம் புரிந்து கொள்ளலாம். தியானம் செய்தவர்கள், பரலோகத்தில் புண்ணிய உலகங்களை அடைவதோடு மட்டுமல்லாமல், அடுத்த பிறவியில் செல்வந்தர்களாகவோ அல்லது சிறந்த யோகிகளாகவோ பிறப்பார்கள். அதன் பின்னர் அவர்கள் மேலும் சாதனையை முன்னெடுத்து மோக்ஷத்தை அடைந்து, வாழ்க்கையின் உயர்ந்த இலக்கை நிறைவேற்றுவார்கள் என்று பகவான் கூறியுள்ளார். கீழேயுள்ள ஸ்லோகத்தைப் பார்ப்போம்.

**ஸ்லோ: ப்ரயத்னாத்யதமாநஸ்து யோகீ ஸம்சுத்தகில்பிஷ:|**
**அநேகஜன்ம ஸம்ஸித்தஸ்ததோ யாதி பராம் கதிம் ||**
**(ப. கீ.6-45)**

தா: அவ்வாறு முயற்சி செய்யும் யோகி பாவங்களிலிருந்து விடுபட்டு, பல பிறவிகளில் செய்த பயிற்சியின் மூலம் யோக சித்தியை அடைந்து, அதன்பின் பரமமான மோக்ஷத்தை அடைகிறான்.

இதனால் நாம் புரிந்து கொள்ள வேண்டியது இந்த தற்காலிகமான இகலோக வாழ்க்கை ஏன்? நாம் இந்த உடலை ஏன் பெற்றுள்ளோம்? இது அனைத்தும் நமது (ஆத்மாவின்) நிரந்தரமான பரலோக வாழ்விற்காகவே என்பதை அறிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக இங்கே எதுவும் இல்லையென்றாலும் அதற்காக வருந்த தேவையில்லை. பிறரிடம் இருப்பதற்காக பொறாமை கொள்ள வேண்டாம். செல்வத்தை அடைவதற்காக தவறுகள் அல்லது பாவங்கள் செய்ய வேண்டாமென்று புரிந்து கொள்ளுங்கள். இவை அனைத்தை செய்யும் போது, நாம் தேவையில்லாமல் வாழ்க்கையை துன்பத்திற்கு ஆளாக்கிக் கொள்கிறோம். முக்கியமாக தியானத்தை செய்ய முடியுமா இல்லையா என்று சிந்திக்க வேண்டும். தியானம் செய்யும் திறன் உள்ளவர்களே உண்மையில் உயர்ந்தவர்கள். "பணம் அல்ல, தியானமே உண்மையான செல்வம்." "செல்வம் உங்களோடு வராது ; தியானம் உங்களோடு வரும் ." எனவே, "செல்வத்தின் பின்னால் செல்லாமல் தியானத்தின் பின்னால் செல்லுங்கள்". நாமனைவரும் பரலோக வாசிகள் என்று தெரிந்துகொள்ளுங்கள்.

மேலும் ஆன்மாக்களான நாம், பரலோக வாசிகளான நாம், பரலோக லாபங்களையும், உயர்வையும் அடைய இகலோகத்திற்கு வந்து இந்த வாழ்க்கையை எடுத்திருக்கிறோம் என்று தெரிந்துகொள்ளவேண்டும்.

உடலின் தேவைகளைப் பராமரித்துக்கொண்டு இருக்கும் நேரத்தை வீணடிக்காமல், தியான சாதனையில் ஈடுபட்டு, ஆன்ம லாபத்திற்காகப் பயன்படுத்த வேண்டும். அதாவது, ஆன்மாவின் முன்னேற்றத்திற்கு, வளர்ச்சிக்கு செயல்பட வேண்டும். முக்கியமாக தியானத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஆன்ம ஞானம் சம்பந்தப்பட்ட நூல்களை படிக்க வேண்டும். ஆன்ம ஞானமுள்ளவர்களின் நெருக்கத்தில் இருக்க வேண்டும். அதற்கு சம்பந்தப்பட்ட முகாம்களில் கலந்துகொண்டு பயனடைய வேண்டும். இவையெல்லாம் ஆன்மாவுக்கு லாபம் தரும்.

அப்படிப் பிறருக்கு உதவுவது, தியானம் செய்வது, நூல்கள் படிப்பது ஆகியவற்றைச் செய்தால், வாழ்வு உண்மையான வாழ்க்கையாக மாறும். அப்பேற்பட்ட வாழ்க்கையே உண்மையான 'ஆன்மீக வாழ்க்கை' ஆகும். இப்படி வாழவில்லை என்றால், அந்த வாழ்க்கையே வீணாகிவிடும். அதனால், முக்கியமாக வாழ்க்கையை மிகக் கவனமாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்த வேண்டும். பரலோகத்தில் நாம் நாடுவது எதுவோ அதை அடைய வேண்டும். வாழ்க்கையை ஏன் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை விளக்குவதற்காக ஒரு எடுத்துக்காட்டு பார்க்கலாம்.

**வாழ்க்கையை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்!**

இரண்டு நபர்கள், அருகிலுள்ள கிராமத்தில் இருக்கும் உறவினர் வீட்டிற்குச் சென்றனர். ஆனால் அவர்கள் செல்லும் முன்பே, அந்த கிராமத்தில் கனமழை பெய்ததால், சாலைகள் முழுவதும் சேறு நிரம்பி அவர்களின் கால்களில் சேறு ஒட்டியது. அந்த உறவினர், அவர்கள் கால்களை கழுவுவதற்காக ஒரு செம்பு தண்ணீர் வழங்கினார்.

முதல் நபர் செம்பில் கொடுக்கப்பட்ட தண்ணீரை சிறிதளவு கால்களுக்கு ஊற்றி, கால்களை நன்றாக தேய்த்து மீதமுள்ள தண்ணீரை பயன்படுத்தி, மீண்டும் கால்களை அழகாக சுத்தம் செய்தார், கைகளையும், வாயையும், முகத்தையும் கழுவினார். இவ்வாறு, உறவினர் கொடுத்த ஒரு செம்பு தண்ணீரை மிகச் சிக்கனமாக பயன்படுத்தி, தன்னை முழுமையாக சுத்தம் செய்தார்.

இரண்டாவது நபர் செம்பில் கொடுக்கப்பட்ட தண்ணீரை நேரடியாக தனது கால்களில் ஊற்றி வீணாக்கினார். அதனால் சேறு முழுமையாக கழுவவில்லை. அவர் மீண்டும் தண்ணீர் கேட்டார்; மறுபடியும் தண்ணீரை கொடுத்தார், ஆனால் கால்கள் இன்னும் சுத்தமாகவில்லை. அந்த உறவினர் மீண்டும் தண்ணீர் கொடுத்தார், இதே நிலை தொடர்ந்தது. முழு தண்ணீர் வீணாகி, கால்கள் கூட சுத்தமாக்கவில்லை. கை, வாய், முகம் இவற்றை சுத்தம் செய்வது எப்படி முடியும். அந்த உறவினர், "இதுவரை நான் இவ்வளவு தண்ணீர் கொடுத்தும், இன்னும் தண்ணீர் கேட்கிறார்!" என்று உள்ளுக்குள் கடுப்புடன் எண்ணினார்.

அந்த இரு நபர்களைப் போலவே நமது வாழ்க்கையும் உள்ளன. சிலர் தங்கள் வாழ்க்கையை சிக்கனமாக பயன்படுத்தி அதனைச் செம்மைப்படுத்தி விடுகின்றனர். அவர்கள் தங்கள் நாளை ஒழுங்காகப் பிரித்து நடத்துகின்றனர்: ஒரு பகுதியை வாழ்வாதாரத்திற்கு தேவையான உழைப்பிற்காக, ஒரு பகுதியை குடும்ப பொறுப்புகளுக்காக, இன்னொரு பகுதியை சமூக நலனுக்காக, மிக முக்கியமாக, வாழ்க்கை இலக்கை அடைய தேவையான செயல்களுக்காக பயன்படுத்துகிறார்கள். அதாவது, யோகிகளின் புத்தகங்களைப் படிக்க, நல்லவர்களின் நட்பு மற்றும் வழிகாட்டுதலைப் பெற, தியான சாதனையில் மூழ்கி, ஆன்மீக வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கிறார்கள். இவ்வாறு வாழ்ந்து, அவர்கள் முக்தியையும், வாழ்க்கையின் இறுதியான இலக்கான மோட்சத்தையும் அடைகிறார்கள். குடும்ப வாழ்க்கையிலேயே நிர்வாணத்தை அடைகிறார்கள்.

பெரும்பாலானோர் இரண்டாவது நபரைப் போல் தங்கள் வாழ்க்கையை வீணாக்கி வருகின்றனர். அவர்கள் தங்கள் உடல், சமூகம், மதம், மண்டலம், நாடு போன்ற விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தங்களை பூமிலேயே நிலையாக

இருப்பவர்கள் என்று நினைத்து, பதவிகள், புகழ், பெருமை ஆகியவற்றின் பின்னால் ஓடி, வாழ்க்கையின் உண்மையான இலக்கை மறந்து வாழ்கின்றனர். அவர்கள் தியானம் செய்ய மறுக்கின்றனர், செயல்களில் (கடமைகளில்) இறங்கி வாழ்க்கையை துயரம் நிறைந்ததாக ஆக்குகின்றனர், வாழ்க்கையை வீணாக்கி, இறுதியில் துயரத்துடன் அதை முடிக்கின்றனர். இவ்வாறு எத்தனை பிறவிகள் எடுத்தாலும், அவர்களின் நிலை மாறாது: "புனரபி ஜநனம் புனரபி மரணம்" (மீண்டும் பிறப்பு, மீண்டும் மரணம்).

மனிதப் பிறவி பெறுவது மிகக் கடினம். ஆனால் இந்த வாழ்க்கையை அவர்கள் இவ்வாறு வீணாக்குகின்றனர்: வாழ்நாளில் பாதி உறக்கத்துக்கே செல்கிறது, மீதமுள்ளதில் ஒரு பகுதி குழந்தைத் தருணத்திற்கு, மற்றொரு பகுதி முதிய வயதுக்கு, மீதமுள்ள நேரத்தை உணவுக்கும், பணத்திற்கும், குடும்ப பொறுப்புகளுக்கும் செலுத்துகிறார்கள். இதற்கு மேல் இருக்கும் சிறு நேரத்தை, தொலைக்காட்சி, பயனற்ற புத்தகங்கள், பத்திரிக்கைகள், பகடி, பிறரின் சண்டைகளில் தலையிடல், போதை பழக்கங்கள் என வீணாக்கி, காலத்தையும், சக்தியையும் முழுமையாக நாசம் செய்கிறார்கள்.

வீணாக செலவிடப்படும் நேரத்தை தங்கள் "ஆன்மா", அதாவது தங்களுக்காக, தங்கள் வாழ்க்கை இலக்கை அடைவதற்காக செலவிட்டால், முதலாவது நபரைப் போலவே வாழ்க்கையை பயனுள்ளதாக மாற்றியவர்களாக இருப்பீர்கள். அதேபோல, எவ்வளவு செம்பு தண்ணீரைக் கொடுத்தாலும் காலில் உள்ள சேறு போகாதது போல், எத்தனை பிறவிகள் எடுத்தாலும் கர்மங்கள் நீங்காது, துன்பங்கள் போவதில்லை. இப்படிப்பட்டவர்களுக்கு "இறப்பும் பிறப்பும் இல்லாத நிலை" கிடைக்காது, இறந்து பிறப்பதே அவர்களின் நிலையாகும்.

ஆகையால் பணம் செலவழிக்கும்போது எவ்வாறு சிக்கனமாக இருக்கிறோமோ, அதேபோல் வாழ்க்கையையும் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். பொறுப்புகளைச் செய்துகொண்டே, மீதமுள்ள நேரத்தை வாழ்க்கை இலக்கை அடைவதற்கு, அதாவது ஆன்ம உயர்விற்காக (பரலோக முன்னேற்றத்திற்காக), யோகிகள் கூறிய வழியில் நடந்துகொண்டு, அவர்களின் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். இது உண்மையில் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டியது.

**"நாம் பரலோக வாசிகளே தவிர இகலோக வாசிகள் அல்ல."**
**"நாம் செய்ய வேண்டியது தியானம்; அடைய வேண்டியது ஞானம்."**


இன்று நீ உன்
ஆன்மாவுக்காக என்ன
செய்தாய் ?
உன் ஆன்மாவுக்கு
பயன் தருவது
தியானம் மட்டுமே
Rs.30/-
© Science Photo Library